**மாகாணக்கல்வித்திணைக்களம் - வடக்கு மாகாணம்**

# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

**தரம் - 11** **தமிழ்இலக்கிய நயம்** நேரம் : 3 மணித்தியாலம்

சுட்டெண் : புள்ளி

**பகுதி I இல் இரு வினாவும், பகுதி II இல் 3ம் வினாவையும், பகுதி III இல் ஏதாவது இரு வினாவையும் தெரிவு செய்து மொத்தமாக 5 வினாக்களுக்கு விடை தருக.**

---

## பகுதி I

**01) (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

i. "நன்றி கொன்று, அருநட்போடு நார் அறுத்து
ஒன்றும் மெய்ம்மை சிதைத்து, உரை பொய்த்துளார்....."
அ) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
ஆ) நன்றி கொன்றவன் என்று சுட்டப்படுபவன் யார்?

ii. புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை பூவாளி
உள்ளரிக்கச் சோர்ந்தாள் உயிர்....
அ) இங்கே சோர்ந்தவள் யார்?
ஆ) இப்பகுதி இடம் பெற்ற காப்பியம் யாது?

iii. இம்மேதினியில் புதுமாற்றம் படைத்து பொன்
விடுதலைக்கீதம் இசைத்திடுவோம்...
அ) இக்கவிதையைப் படைத்தவர் யார்?
ஆ) இக்கவிதை வரி உணர்த்தும் பொருள் யாது?

iv. "அய்யோடா கீழே சிதறிய முத்துக்களைப் பொறுக்குங்கள்"
அ) இவ்வரியில் கீழே சிதறிய முத்துக்களென குறிப்பிடப்படுவது எது?
ஆ) எச்சந்தர்ப்பத்தில் இக்கூற்று இடம்பெற்றுள்ளது?

v. "தீ வெயிலில் சிட்டு
சீதளக் காற்றுடன் கணநிழல்
ஓ அதுவொரு கழுகு....."
அ) இக் ஹைக்கூக்கவிதையின் சொந்தக்காரன் யார்?
ஆ) கழுகு எதன் குறியீடாகக் காட்டப்படுகிறது?

*(45 = 20 புள்ளிகள்)*



kalvi.lk

02) **கீழ்க்காணும் பாடற்பகுதியை வாசித்து, தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.**

தேன்நுகர் வண்டு மதுதனை உண்டு
    தியங்கியே கிடந்ததைக் கண்டு
தான் அதைச் சம்பு வின் கனி என்று
    தடங்கையில் எடுத்து முன் பார்த்தாள்
வான்உறு மதியம் வந்தது என்று எண்ணி
    மலர்க்கரம் குவியுமென்று அஞ்சிப்
போனது வண்டோ பறந்ததோ பழந்தான்
    புதுமையோ இது எனப் புகன்றாள்.

i. கவிஞனின் கற்பனையாற்றலை எடுத்துக் காட்டுக.
ii. இப்பாடல் பகுதியில் காணப்படும் அணியைக் கூறி அதன் சிறப்பை விளக்குக.
iii. பெண்ணின் அழகைக் கவிஞர் நாகரிகமாக விளக்கும் விதத்தைக் கூறுக.

iv. பின்வரும் அரும்பதங்களுக்குரிய பொருளைத் தருக.
    *1)* தியங்கி
    *2)* தடங்கை
    *3)* மதியம்
    *4)* மது
    *5)* நுகர்

v. இப்பாடலில் காணப்படும் நயத்தல் செயற்பாட்டை விளக்குக.

*(55 = 25 புள்ளிகள்)*

## பகுதி II

03) **கீழ்க்காணும் உரைப்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

எனது தீவு நான்கு பக்கமும் சுவர்களால் சூழப்பட்டது. இந்தத்தீவில் என்னுடன் சேர்ந்து உடனிருந்தவை ஒரு புத்தக அலுமாரி, ஒரு கசற்றெக்கோடர், ஒரு செற்றி, ஒரு யன்னல் மட்டும் தான். யன்னல் ஊடாக வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். வீடுகள், மரங்களுக்கு அப்பால் மேலே மிக உயரத்தில் வானம் அதன் நீலநிறம் எனக்குப் பிடிக்கும் அதனால் தான் எனது தீவின் சுவர்களை நீலமாக்கி வைத்திருக்கிறேன். தரைக்கும் நீலம் விரித்திருக்கிறேன். தவிர நாலு சேட்டுக்களும் நீலக்கலரில் வைத்திருக்கிறேன்.

எனது தீவில் மட்டும் தான் நான் அழுவேன். இந்தத்தீவில் இருக்கின்ற போது அடிக்கடி அழுகை வருகிறது. வெளியே போகின்ற போதெல்லாம் அணிந்து செல்கிற சிரிப்பை கழட்டி எறிந்து விட்டுச் சுதந்திரமாக அழுவேன். யன்னலுக்கு இது வடிவாகத் தெரியும்.

எனக்கென்ற தீவை நான் முதல் முதலில் அமைத்துக் கொண்டகாலம் எனக்கு இன்னும் ஞாபகமிருக்கிறது. அப்போது நான் சின்னப்பிள்ளை எல்லோருடனும் சேர்ந்து விளையாடினேன். அன்பாக இருந்தேன். எனக்கு சில விடயங்கள் பிடிபடும் வரை எல்லாம் உண்மை என்று நம்பினேன். எனது ஏக்கத்தை வைத்துப் பெரிசுகள் வேடிக்கை பார்ப்பதை உணர்ந்தேன். எங்கள் தோட்டப் பயிரை மட்டும் வெள்ளாடு மேய்ந்ததாகக் கதையளந்தார்கள். எங்கள் தோட்டத்திற்கு மட்டும் வேலியில்லையென்று சொல்லிச் சிரித்தார்கள். நான் கூசிக் குறுகிப் போனேன்.



kalvi.lk

i. எனது தீவு எனக் குறிப்பிடப்படுவது எது?

ii. இப்பந்தியில் காட்டப்படும் கதாபாத்திரம் அழுவதற்கான காரணம் யாது?

iii. நான் கூசிக் குறுகிப் போனேன் என்று கூறுவதற்கான காரணம் யாது?

iv. "வெளியே போகின்ற போதெல்லாம் அணிந்து செல்கிற சிரிப்பை கழட்டி எறிந்து விட்டு சுதந்திரமாக அழுவேன்" என்ற வரி உணர்த்துவது யாது?

v. தீவு மனிதன் என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

*(55 = 25 புள்ளிகள்)*

## பகுதி III

**04)** "மரம் உயர்திணை" என்ற பத்தி எழுத்தில் மரத்தினை உயர்திணையாகக் காட்டுவதற்கு ஆசிரியர் கையாண்ட எடுத்துக் காட்டுக்களை விபரிக்குக.

**05)** 'கானல் வரி' என்ற பாடப்பரப்பை அடிப்படையாகக் கொண்டு பின்வருவன வெளிப்படுமாற்றை விளக்குக.

அ) சோழமன்னரின் பெருமை

ஆ) காவேரி நதியின் வளமும் சிறப்பும்

இ) சோழ மன்னனின் நிலைபேறுடைய ஆட்சிக்குக் காரணம் என இளங்கோவடிகள் குறிப்பிடுவது எதனை?

Education கல்வி අධ්‍යාපන

**06)** யேசு கிறிஸ்து என்ற பாட அலகில் மரியாமதலேனா, யேசுகிறிஸ்துநாதர் ஆகியோர் பற்றிய பாரதியாரின் சித்திரிப்புக்களை விபரிக்குக.

**07)** தெளிவு என்ற சிறுகதையில்

அ) பாரூக் நானாவின் ஏழ்மை நிலை

ஆ) குடும்ப வாழ்வின் இன்ப துன்பங்களை கதாசிரியர் வெளிப்படுத்தும் முறையை விளக்குக.

*(152 = 30 புள்ளிகள்)*



kalvi.lk

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page